**செய்தி வெளியீடு எண்: 466** **நாள்: 17.07.2018**

## செய்தி வெளியீடு

## மின் தொடரமைப்பு மற்றும் இயக்குதல் பணிகள் முன்னேற்றம் குறித்து

## மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் மின் தொடரமைப்பு கழகம் ஆகியவை சார்பில் பல்வேறு திட்டப் பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் சாதனைகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மின் தொடரமைப்பு மற்றும் இயக்குதல் குறித்து துறைவாரியாக ஆய்வு செய்யப்பட்டது. செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் குறித்து எரிசக்தித் துறை முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப., அவர்கள் விளக்கம் அளித்தார்.

இக்கூட்டத்தில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் திரு. பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., மின் தொடரமைப்பு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். சண்முகம், இயக்குநர் பகிர்மானம் திருமதி. எம்.ஏ. ஹெலன், இயக்குநர் திட்டமிடுதல் திருமதி. எஸ். கீதா, இயக்குநர் உற்பத்தி டி. வேல் முருகன், இயக்குநர் மின் தொடரமைப்பு திரு. டி. செந்தில் வேலன், இயக்குநர் இயக்கம் திருமதி. ஆக்ஸிலியம் ஜெயமேரி, இயக்குநர் நிதி திருமதி. எம். மகேஸ்வரி பாய் மற்றும் அனைத்து மாவட்ட தலைமை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மின் உற்பத்தி, விநியோகம், திட்டமிடுதல், நிதி, ஆகியவை குறித்து இயக்குநர்கள் மற்றும் தலைமை பொறியாளர்கள் ஆகியோருடன் தொடர்ந்து ஆய்வு நடை பெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**